# 19 தூயோர் வணக்கம்



19.1 தூய அந்தோனியார்

1. பதுவை நகர் தூய அந்தோனியார் தொடர்பாக நீர் அறிந்த மூன்று விடயங்களை எழுதுக.

2. அவருடைய வாழ்விலிருந்து உமது வாழ்க்கைக்குக் கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த முன்மாதிரிகை யாது ?

சிலை வழிபாடு என்பது; ஒரு நபர் அல்லது சிலை அல்லது உலக செல்வம் என்பவற்றில் இறைத்தன்மை இருப்பதாகக் கருதி நம்பிக்கை வைத்து

வழிபடுவதாகும். திருச்சுரூபமானது அது தொடர்பான ஒருவரை எமது ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறது. மேலும் புதுமை செய்யும் ஆற்றல் அவற்றிற்கு உண்டு என நம்பக் கூடாது என்பதாகும். சுரூபங்கள், வரவணிக்கம் என்பன இறை ஆசீருடன் புனிதமாக்கப்படுகின்றன. அவற்றை மரியாதை வணக்கத்துடன் பயன்படுத்த வேண்டும். புனிதர்கள் தமது வாழ்நாள் முழுவதும் இறைவனுக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்து இறந்தவர்கள். திருச்சுரூபங்களுக்கு அல்லது படங்களுக்கு வணக்கம் செலுத்துவது அதனைக் குறிக்கும் புனிதருக்கு வணக்கம் செலுத்துவதாகும்.

திருச்சுரூப வணக்கத்தின் நோக்கம் அது தொடர்பான புனிதர்களை நினைவு கூர்தலாகும். இறைவனோடு நட்புறவுகொண்ட ஒருவருக்கு வணக்கம் செலுத்துவது இறைவனுக்குச் செலுத்தப்படும் வழிபாடாகும் என்பதில் நம்பிக்கை கொள்ள வேண்டும். புனிதர்களது முன்மாதிரிகையான வாழ்வை முன்னிட்டே அவர்களுக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. ஆகவே அவர்களூடாகச் செபிப்பதன் மூலம் திருப்பண்டங்களுக்கும் திருச்சுரூபங்களுக்கும் வணக்கம் செலுத்துவோம். அவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி எமது வாழ்வைக் கட்டியெழுப்புவோம்.

‘‘அவரது ஆடையைத் தொட்டால் எனது நோய் குணமாகும்’’ என ஆண்டவர் இயேசுவின் மேலாடையைத் தொட்ட பெண் நம்பிக்கை கொண்டாள். இயேசுவின் மேலாடையை ஒரு புனித பொருளாக அவள் கருதியமையே இந்நிகழ்ச்சியின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டிலும் உருவங்கள் பயன்படுத்தப்பட்டன. கெருபும் (தேவ தூதர் விப. 25:18-22) உடன்படிக்கைப் பேழையை அழகுபடுத்த செய்யப்பட்ட உருவம் வெண்கலப் பாம்பு (எண். 21: 8-9) பாம்பினால் தீண்டப்பட்டவர்கள் சுகம் பெறுபவதற்காக செய்யப்பட்டது. இவை இறைவனின் அறிவுரைக்கமையவே மேற்கொள்ளப்பட்டன.

நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக்கொள்ளமாட்டேன்; என்னைப் புறக்கணிக்கும் மூதாதையாரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்.

(விப. 20:4-5)

இறைவன் எதிரிகள் மட்டில் பொறுமையற்றவர். இங்கு எதிரிகள் எனப்படுவது வேறு தெய்வங்களாகும். புனிதர்கள் வேறு தெய்வங்களாகக் கருதப்படுவதில்லை. எனவே அவர்கள் இறைவனின் எதிரிகள் அல்ல நண்பர்களாவர். தூயோர் கத்தோலிக்கராகிய எமக்கு முன்மாதிரியானவர்கள். தூயோரை, திருப்பண்டங்களை, புனித இடங்களை அவமதிப்பது அல்லது அவற்றின் மட்டில் அவமரியாதையுடன் நடந்துகொள்வது பாவமாகும். தூயோர் விண்ணக பேரின்பத்தை உரிமையாக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் இறைவன் முன்னிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் எமக்காக செபிக்கின்றார்கள்.

**தூயோரின் வழிகாட்டலுக்கு ஏற்ப நீங்கள் செய்ய வேண்டியவை**

- ✝ வாழ்க்கையின் எல்லாச் செயற்பாடுகளிலும் இறைவனுக்கு முதலிடம் கொடுத்தல்.
- ✝ இறைவார்த்தைக்கு முதலிடம் கொடுத்து அதனை தினமும் வாசித்து தியானித்தல்.
- ✝ தூயோர் பிறருக்கு உதவ முன்வருவதைப்போல் நாமும் பிறருக்கு உதவி செய்ய முன்வருதல் வேண்டும்.
- ✝ தூயோரின் வாழ்க்கை வரலாறுகளை வாசித்து அவற்றை எம் வாழ்விற்கு முன்மாதிரியாகக் கொள்ளல்.

✝ தூயோர் இறைத்திட்டத்திற்கு ஏற்ப வாழ்ந்ததைப்போல் நாமும் வாழ முயற்சிக்க வேண்டும்.

✝ உமது ஆலயப் புனிதரின் திருவிழாவின் போது நடைபெறும் நவநாட்களிலும் திருப்பலியிலும் முழுமையாகப் பங்குகொள்ளல்.

**செயற்பாடு**

1. புனிதர்களின் பக்தி தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கிய உரையாடல் ஒன்றைத் தயாரிக்குக.

2. நீர் விரும்பிய புனிதர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றின் சாரம்சத்தை எழுதுக.

3. அப்புனிதரின் வாழ்விலிருந்து பின்பற்றக்கூடிய முன்மாதிரிகைகள் மூன்று தருக.

**வாழ்க்கைக்கு**

தூயோரின் வாழ்வைப் பின்பற்றுவோம்.